

மதுரை மேல அனுப்பானடி ஹவுசிங் போர்டு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள சிறப்பு முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு திட்டம் குறித்து பொதுமக்களிடையே எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார் உள்ளிட்ட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்



முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் முன்னிலையில் சமீபத்தில் முன்னாள் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மனோஜ் பாண்டியன் தலைமையில், கழகத்தில் இணைந்த ஓ.பி.எஸ் அணி நிர்வாகிகள்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பனி டம் ஓ.பி.எஸ் அணி சேரன்மகாதேவி ஒன்றிய செயலாளர் கணபதி, வீரவநல்லூர் நகர செயலாளர் முருகானந்தம்,அம்மா பேரவை முன்னாள் செயலாளர் முப்பிடாதி, அ.தி.மு.க அண்ணா தொழிற்சங்க புறநகர் மாவட்ட செயலாளர் கந்தசாமி,கல்லிடைக்குறிச்சி பேரூர் வார்டு செயலாளர்கள் உலகநாதன், பாலசுப்பிரமணியன்,ராஜேந்திரன், சேரன்மகாதேவி பேரூர் செயலாளர் மாசானம்,சேரன்மகாதேவி பேரூர் அவைத்தலைவர் வள்ளிநாயகம், முத்தையா,நகர இளைஞர் அணி பாலச்சந்தர் ஆகியோர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,சேரன்மாதேவி கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துபாண்டி (எ) பிரபு,சேரன்மகாதேவி பேரூராட்சி பால்மாரி,வழக்கறிஞர் பிரகாஷ் ஆகியோர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி சார்பில் சினேகம் முதியோர் இல்லத்தில் வைத்து மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் தலைமையில், மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு முதியோர்களுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் முகமது பஷீர், லதா கலைவாணன், த.தங்கராஜா, சூ.அமல செல்வன், த.ஜீவா, என்.பி.துரை, ரெ.சகாய மைக்கேல் ராஜன், ஜெ.முஹம்மது ஸாலிஹ், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகர தி.மு.க சார்பில் பெரிய பள்ளிவாசல் மணிக்கூண்டு முன்பாக முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை தலைமையில், நகர செயலாளர்கள் எஸ்.அப்பாஸ், இத்தாலியன் பீரப்பா முன்னிலையில், 1000 ம் பேர்களுக்கு பிரியாணி பொட்டலங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் முத்துப்பாண்டி,கழக நிர்வாகிகள் ஷேக் தாவுது, பூங்கொடி, சுரேஷ்,முருகன்,காசி,மஸ்தான் அலி, காளிமுத்து,செய்யது மசூது,ரவி, சேப்பிளை அலி,கணேசன்,அயூப் கான்,மகராசா பாஷா,சக்திவேல், ஆஷிக்,ஈஸ்வரன், அகமது அலி, சாகுல்ஹமீது, பரகத்துல்லா, அகமது அலி, மக்தூம், மணிகண்டன், பிரகதீஸ் ராஜா, பைசல், முகமது அக்பர், பேபி கனி மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இன்றைய தினம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 60வயதிற்கு மேற்பட்ட மூத்தகுடிமக்களுக்கான அடையாள அட்டை மற்றும் உதவி உபகரணங்கள் வழங்குவதற்கான மதிப்பீட்டு முகாமில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு அடையாள அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரஞ்சித்,தங்கவேல் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரி முத்து, அன்புராஜன், இம்மானுவேல் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பாக கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதூர் மூன்றுமாவடி லூசி பெரி நோபல் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மாநகர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நரேந்திரன் ஏற்பாட்டில், கழக மாநில உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு முன்னிலையில் அசைவ உணவுகள் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ராகவன், மூவேந்திரன், பகுதிச் செயலாளர் புண்ணியமூர்த்தி, கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், திலகவதி ஜெயராஜ், தீபக், மாதவன், புதூர் வேலு, இளங்கோ, கேசவன், காளீஸ்வரன், பிரசன்னா, சிக்கந்தர், சித்திக், கருப்பு, செந்தில் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் குழந்தைகளுக்கு தங்க நாணயம் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கும் நிகழ்ச்சி பரமக்குடி மேற்கு ஒன்றியம் பார்த்திபனூர் அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா திருப்பத்தூர் சட்டமன்ற பொறுப்பாளர் டாக்டர் முன்னாள் அமைச்சர் சுந்தர்ராஜன், ஒன்றிய கழக செயலாளர் க.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர், விழாவிற்கான ஏற்பாடுகளை பரமக்குடி மேற்கு ஒன்றிய இளைஞர் அணியை சார்ந்த கல்பனா நா.ஆனந்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.



திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் அரசு மேல்நிலைப்பள்ளி நடைபெற்ற அரசு பொது மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை நடத்துகிற ”நலம் காக்கும் ஸ்டாலின் எனும் மருத்துவ முகாமை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் துணை மேயர் கே.ஆர்.ராஜு முன்னிலையில் பார்வையிட்டு துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மானூர் ஒன்றியக்குழு தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன், மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி,மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.க.மணி,ஆ.க.ம.கீர்த்தி,பஞ்சாயத்து தலைவர் கவிதா பிரபாகரன், பரமசிவம், கவுன்சிலர் மாலதி செல்லதுரை,முத்துப்பாண்டி,கிளைக் கழகச் செயலாளர் சுந்தர், களத்தியான், உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஆசியுடன் “இளைஞர் எழுச்சி நாளான துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிவுறுத்தலின்படி மண்டபம் மேற்கு ஒன்றியம் கழகத்தின் சார்பாக அறுசுவை உணவு வழங்கபட்டது. இந்நிகழ்ச்சி மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே ஜே பிரவீன் ஏற்பாடு செய்திருந்தார்.